# THE ROLE OF AL HATHEES AND THIRUKKURAL IN BRINGING SOCIAL HARMONY AMONG HINDU AND MUSLIM SOCIETIES

**A.N.M. Nawas[55], M.R.F. Ahana[56] & M.M.F. Sumaiya[57]**

Correspondence: nawassharafyhani@gmail.com

ABSTRACT

Every religion in the world is bound to create unity and harmony between the communities with their teaching and guidance. Religions play a major role in clarifying and systematizing human life patterns, rights, morals, philosophical thinking of the man. The need of the hour is to establish social harmony through religious teaching among the Tamil speaking community in Sri Lanka. Without no doubt, this will bring a chance to eliminate the conflict situation and create social harmony in society. Whenever a man was found going astray, he was guided to the right path for prophets and Messengers. Each Messenger was sent by God to every community. The Messengers belonged to their respective communities and spoke their relevant languages. The Lord has provided them with peculiar scriptures and gospels. In this fame, the sayings used by prophet Muhammad (sal) and the thirukkural which were widely accepted and followed in Islam and Hinduism respectively occupied a remarkable place. It is noteworthy mentioning that there are many types of research been carried out on this regard, of a prophet been sent to the Tamil speaking community and a scripture been given to him, also is there a possibility for Thiruvalluvar to be the prophet sent by the God? In these two scriptures, it generally focuses on many important aspects. For example. The Social unity, the hospitality, the humanist acts, neutrality towards the groups, staying away from backbiting, charity, kindness, about negligence, about forgiveness, about enviousness of the evil, supports to the social unity and Harmony. We must follow all the neutral features and the common features of the various scriptures to build racial and religious harmony in this multinational country where Buddhism, Hinduism and Islam remain as the three main religions. It is important to be interested in the common characteristics that we all share in the common believes and the common virtues that we all share to live and make this country living heaven for the people. This study has been subjected to sociological, comparative and descriptive research method. The first and the second sectors have been used. In the 1st sector hadees etc were used. And in the second sector books and magazines and papers were used. Thereby, there can be a much-attained possibility to create a positive and healthy environment and to live as a unified Sri Lankans in the society

**Keywords:** Al Hadiz, thirukkural, social solidarity, discipline

**ஆய்வுச் சுருக்கம்.**

*உலகில் பின்பற்றப்படும் அனைத்து மதங்களும் தமக்கு உரித்தான வேதத்தைக் கொண்டு இனங்களுக்கிடையிலான ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துகின்றன. இவ்வுலகில் வாழும் மனிதனுக்கு அவனது வாழ்வில் பின்பற்றவும், வாழ்வை நெறிப்படுத்திக் கொள்ளவும் மனித வாழ்வியல் முறைமைகள், உரிமைகள், ஒழுக்கம், தத்துவ சிந்தனை பற்றித் தெளிவாக உரைப்பதில் சமயங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளன. பல்லின மக்கள் வாழும் இலங்கை நாட்டில் தமிழ் பேசும் மக்களிடையே சமய போதனைகளின் மூலம் சமூக ஒற்றுமையை ஏற்படுத்துதல் காலத்தின் தேவையாக உணரப்பட்டுள்ளது. இதன் மூலம் முறண்பாடான நிலைகளை களைவதற்கும், இனநல்லிணக்கம் உருவாக்கப்படவும் உறுதுணையாக அமையும் என்பதில் ஐயமில்லை. மனிதன் இறைவழியை விட்டுத் திசைமாறிச் சென்றபோதெல்லாம் அவனைச் சரியான வழியில் நெறிப்படுத்தி உயரிய பாதையின் பக்கம் செலுத்த அவ்வப்போது இறைத்தூதர்கள் இப்புவிக்கு*

[55] Department of Arabic Language, South Eastern University of Sri Lanka.
[56] Department of Arabic Language, South Eastern University of Sri Lanka.
[57] Department of Arabic Language, South Eastern University of Sri Lanka.

*அனுப்பப்பட்டுக் கொண்டே இருந்தனர். ஒவ்வொரு சமூகத்தாருக்கும் ஒவ்வொரு இறைத்தூதர் இறைவனால் அனுப்பிவைக்கப்பட்டனர். அந்த இறைத்தூதர்கள் அந்தந்த சமூகத்தைச் சார்ந்தவர்களாகவும் அவர்களின் மொழியை பேசுபவர்களாகும் இருந்தனர். அவரவர்களுக்கெனத் தனிப்பட்ட வேதங்களையும் ஆகமங்களையும் இறைவன் வழங்கியே வந்துள்ளான். இவ்வகையில் இந்து, இஸ்லாம் ஆகிய சமயங்களில் பின்பற்றுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட முஹம்மது நபி(ஸல்) அவர்களுடைய பொன் மொழிகளும், திருவள்ளுவர் ஏற்றிய திருக்குறளும் பிரதான இடத்தைப் பிடித்துள்ளன. தமிழ் பேசும் மக்களுக்கு ஓர் இறைத்தூதர் வந்திருக்கலாம்தானே? அவருக்கென ஒரு வேதம் வழங்கப்பட்டிருக்கலாமே? இந்த இறைத்தூதர் திருவள்ளுவராக இருக்க வாய்ப்புண்டா? இந்த மறை திருக்குறளாக இருக்கலாமா? என இது தொடர்பில் ஆராய்ச்சியை அறிஞர்கள் பலர் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்விரண்டு போதனைகளிலும் சமூக ஒற்றுமையினை ஏற்படுத்தும் பொதுவான கோட்பாடுகள் உரைக்கப்பட்டுள்ளது. அவற்றுள் அறன் வலியுறுத்தல், விருந்தோம்பல், இனியவை கூறல், நடுவுநிலைமை, புறங்கூறாமை, கொடை, இரக்கம், கோபம் தவிர்த்தல், மன்னிப்பு, பொறாமை கொள்ளாமை, தீவினையச்சம் போன்ற போதனைகள் சமூக ஒற்றுமைக்கும் இனநல்லிணக்கத்துக்கும் துணைபுரிகின்றன.*

*இவ்வாய்வு சமூகவியல், ஒப்பீட்டு, விவரண ஆய்வு முறைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவுகளாக அல் ஹதீஸ் கிரந்தங்களும், திருக்குளும் இரண்டாம் நிலைத்தரவுகளாக நூற்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

*இந்து,இஸ்லாம்,பௌத்தம் என பல சமயத்தவர் வாழும் எம் நாட்டில் இன மற்றும் சமய நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட வேத நூற்களில் கூறப்படும் பொதுமைப் பண்புகள் அனைவராலும் பின்பற்றப்படல் அவசியமாகும். நாட்டை சமாதானமான ஒரு நாடாக முன்கொண்டு செல்ல வேண்டுமானால் நாட்டில் வாழும் எல்லா இனங்களும் இவ்வாறான பொதுமைப் பண்புகளில் ஈடுபாடு காட்ட வேண்டும் என்பது முக்கியமான விடயமாகும்.*

*இவ்வாறான பொதுமைப் பண்புகள் சீரிய முறையில் பின்பற்றப்படுமாயின் உலகில் நல்ல பண்பாட்டினையுடைய, ஒற்றுமையுடைய சமுதாயத்தினை உருவாக்க முடியும் என்பது உண்மையாகும்.*

**விளக்கச் சொற்கள்**: அல் ஹதீஸ், திருக்குறள், சமூக ஒற்றுமை, ஒழுக்கம், பொறுமை.

## அறிமுகம்

மனித வாழ்வியல் முறைமைகள், உரிமைகள், ஒழுக்கம், தத்துவ சிந்தனை பற்றித் தெளிவாக உரைப்பதில் சமயங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளன. இலங்கை நாட்டில் தமிழ் பேசும் மக்களிடையே சமய போதனைகளின் மூலம் சமூக ஒற்றுமையை ஏற்படுத்துதல் என்பது முறண்பாடான நிலைகளை களைவதற்கும், இனநல்லிணக்கம் பேணவும் உறுதுணையாக அமையும் என்பதில் ஐயமில்லை. மனிதன் இறைவழியை விட்டுத் திசைமாறிச் சென்றபோதெல்லாம் அவனைச் சரியான வழியில் செலுத்த அவ்வப்போது இறைத்தூதர்கள் இப்புவிக்கு அனுப்பப்பட்டுக் கொண்டே இருந்தனர். ஒவ்வொரு சமூகத்தாருக்கும் ஒவ்வொரு இறைத்தூதர் இறைவனால் அனுப்பிவைக்கப்பட்டனர். அந்த இறைத்தூதர்கள் அந்தந்த சமூகத்தைச் சார்ந்தவர்களாகவும் அவர்களின் மொழியை பேசுபவர்களாகவும் இருந்தனர். அவரவர்களுக்கெனத் தனிப்பட்ட வேதங்களையும் ஆகமங்களையும் இறைவன் வழங்கியே வந்துள்ளான். இவ்வகையில் இந்து, இஸ்லாம் ஆகிய சமயங்களில் பின்பற்றுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட முஹம்மது நபி(ஸல்) அவர்களுடைய பொன் மொழிகளும், திருவள்ளுவர் ஏற்றிய திருக்குறளும் பிரதான இடத்தைப் பிடித்துள்ளன. தமிழ் பேசும் மக்களுக்கு ஓர் இறைத்தூதர் வந்திருக்கலாம்தானே? அவருக்கென ஒரு வேதம் வழங்கப்பட்டிருக்கலாமே? இந்த இறைத்தூதர் திருவள்ளுவராக இருக்க வாய்ப்புண்டா? இந்த மறை திருக்குறளாக இருக்கலாமா? என இது தொடர்பில் ஆராய்ச்சியை அறிஞர்கள் பலர் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்விரண்டு போதனைகளிலும் சமூக ஒற்றுமையினை ஏற்படுத்தும் பொதுவான கோட்பாடுகள் உரைக்கப்பட்டுள்ளனன. அவற்றுள் அறன் வலியுறுத்தல், விருந்தோம்பல், இனியவை கூறல், நடுவுநிலைமை, புறங்கூறாமை, கொடை, இரக்கம், கோபம் தவிர்த்தல், மன்னிப்பு, பொறாமை கொள்ளாமை, தீவினையச்சம் போன்ற போதனைகள் சமூக ஒற்றுமைக்கும் இனநல்லிணக்கத்துக்கும் துணைபுரிகின்றன.

**அல் ஹதீஸ்**

அல் ஹதீஸ் என்பது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அன்னவர்களின் சொல், செயல், அங்கீகாரம் ஆகியவற்றை குறிக்கும். அதாவது பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அன்னவர்கள் வாழ்வில் செய்யும்படி கூறியவை, அன்னவர்கள் செய்தவை, அன்னவர்களின் சமூகத்தில் பிறர் செய்யும்போது அதனை தடுக்காமல் அங்கீகரித்தவை ஆகியவற்றை குறிக்கும். அல் ஹதீஸ்கள் பிற்காலத்தில் வந்த இமாம்களால் நூல் வடிவில் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றில் மிகவும் ஆதாரபூர்வமானவை என முழு உலக முஸ்லிம்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவை ஆறு கிரந்தங்களாகும். அவையாவன:

1. ஸஹீஹ் அல் புகாரி
2. ஸஹீஹ் முஸ்லிம்
3. ஸுனன் அபுதாவூத்
4. ஜாமிஉத் திர்மிதி
5. ஸுனன் நஸாயீ
6. ஸுனன் இப்னு மாஜா

இவை தவிர இன்னும் ஏராளமான ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் வேறு பல ஹதீஸ் கிரந்தங்களிலும் காணப்படுகின்றன. அவை அனைத்தும் முஸ்லிம் அறிஞர் பெரு மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பின்பற்றப்படுகின்றன.

**திருக்குறள்**

திருவள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறளின் காலம் பற்றி பல கருத்து வேறுபாடுகள் ஆய்வாளர்கள் மத்தியில் காணப்படுகின்றன. திரு. வையாபுரிப்பிள்ளை அவர்கள் கி.பி. 450இல் இது தோற்றம் பெற்றிருக்கலாம் எனக்கணிக்கின்றார். காலத்தின் தேவையை அல்லது போக்கை இலக்கியங்கள் காட்டி நிற்பதால் அவர் வரையறை செய்தமை பெரும்பாலும் பொருத்தமுடையதென கூற முடிகின்றது. 1330 குறள்களையும் மூன்று பாலினுள் அடக்கியுள்ளார் வள்ளுவப் பெருந்தகை. இந்நூலின் பெரும்பிரிவு பால் எனவும், சிறுபிரிவு இயல் எனவும், அதனிலும் சிறுபிரிவு அதிகாரம் எனவும் காட்டுவர். இந்த ஒவ்வொரு அதிகாரத்தினுள்ளும் பத்துப்பத்து குறள்கள் உள்ளன. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பால்களை இது கொண்டது. அறத்துப்பால் 38 அதிகாரங்களையும், பொருட்பால் 75 அதிகாரங்களையும், காமத்துப்பால் 25 அதிகாரங்களையும் கொண்டது. மொத்தமாக 133 அதிகாரங்கள் இதில் உள்ளன. (சுபராஜ்)

**ஆய்வின் நோக்கம்**

1. அல் ஹதீஸிலும், திருக்குறளிலும் இடம் பெறும் சமூக ஒற்றுமைக்கான சிந்தனைகளை கண்டறிதல்
2. இதன் மூலம் இந்து, இஸ்லாமிய சமூகங்களுக்கிடையளில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த உதவுதல்

**ஆய்வின் வரையறை**

சமூக நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவதில் துணைபோகும் பிரதான அம்சங்களில் 5 விடயங்களை இவ்வாய்வானது அடிப்படையாகக் கொண்டுள்ளது

1. பொறாமை கொள்ளல் கூடாது
2. பிறருக்கு தீங்கு செய்ய நினைக்கக் கூடாது
3. ஈகை
4. இல்வாழ்க்கை
5. இனியவை கூறல்

**இலக்கிய மீளாய்வு**

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரான காலப்பகுதியில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் தொடர்பான தகவல்கள் தெளிவற்ற தகவல்களாகவே உள்ளன. அவ்வாறே திருவள்ளவர் வாழ்ந்த காலந் தொடர்பாகவும் அறிஞர்களிடையிலே கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன. எனவே தற்காலம் வரை இவர் வாழ்ந்த காலந் தொடர்பாகச் சர்ச்சைகள் இருந்து வருகின்றன என்பதே உண்மை. எது எவ்வாறாயினும் சங்ககால இலக்கிய நூல்களிலொன்றாகக் கருதப்படுகின்ற திருக்குறளின் மூலமாக உலகமே வியக்கும் வகையில் இரண்டு அடிகளில் சீரிய பல கருத்துக்களைத் தந்த பெருமை திருவள்ளுவருக்குரியதே. எவ்விடத்தில் சென்று இதில் சொல்லப்பட்ட கருத்துக்களை எடுத்துக் கூறினாலும் அதில் சொல்லப்பட்ட கருத்துக்கள் எல்லாமே அனைவருக்கும் பொருத்தமுடையதாகவே அமைவதனை அவதானிக்கலாம். அறம், பொருள், இன்பம் போன்ற முப்பாலின் வாயிலாக உலகினையே திரும்பிப் பார்க்க வைத்த பெருமை இதற்கு உண்டு.( சுபராஜ், சத்தியப்பிரியா, ந.)

உலகிலே காணப்படுகின்ற மொழிகள் பலவற்றுக்கு இல்லாத சிறப்பானது செம்மொழியான தமிழ் மொழிக்கு உண்டென்பதனை எவரும் மறுப்பதற்கு இல்லை. இத்தகைய செந்தமிழ் மொழிக்குப் பெருமையினைத் தேடிக் கொடுத்த நூல்களுள் திருக்குறளுக்கும் குறிப்பிடத்தக்க இடமுண்டென்பதனை ஏற்றுக்கொள்ளவேண்டும். இதனைப் படைத்த திருவள்ளுவர் மானுடம் போற்றுகின்ற ஒப்பற்ற உலகப் பொதுமறையில் காலத்திற்கு ஏற்ப மாறாத, மாற்றிக்கொள்ளாத, அழியாத பண்பாட்டினைப் பதிவு செய்துள்ளார். இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் வகுத்ததனைப் போன்று வாழ்வியலுக்கு இலக்கணத்தினை வகுத்தவர் திருவள்ளுவர். (கலாதேவி, ச.,2011)

அறம் தொடர்பாகக் கூறுகின்ற தமிழ் நூல்கள் அதிகளவில் காணப்பட்டாலும்கூட அறம் என்றால் என்ன? என்பதற்கான விடையினைக் காணுவதென்பது கடினமான செயலாகவே உள்ளது. அறம் என்ற சொல்லானது பொருளில் நெகிழ்ச்சியினை உடையது. அதனைப் பகுத்துப் பொருள் காண்பதென்பது எளிதன்று. இருப்பினும் மனிதன் தனக்கென வரையறுத்துக்கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியினைப் பொதுவாக அறம் என்பர். பிறவி தோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வருகின்ற தீவினையின் பயனாகிய அறியாமையினை அறுத்தெறிவதே அறம் என்று ஆன்மீக வண்ணங்குழைத்த விளக்கமும் கொடுக்கப்படுகின்றது.(முருகன் 2011)

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு சமூகவியல், ஒப்பீட்டு, விவரண ஆய்வு முறைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவுகளாக அல் ஹதீஸ் கிரந்தங்களும், திருக்குறளும் இரண்டாம் நிலைத்தரவுகளாக நூற்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வுப் பெறுபேறுகளும் வியாக்கியானங்களும்.**

**1- பொறாமை**

சமூக நல்லிணக்கத்தை, ஒற்றுமையை ஏற்படுத்துவதில் அழுக்காறாமை எனும் **பொறாமை** கொள்ளக் கூடாது எனும் கொள்கையானது இவ்வாறு போதிக்கப்படுகின்றது.

**திருக்குறள்**: (01)

**அறன் ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன் ஆக்கம் பேணாது அழுக்கறுப்பான்** ( 163)

அறத்தினையும், செல்வத்தினையும் வேண்டாம் என்று சொல்பவன், மற்றவன் செல்வத்தினைக் கண்ட போது தாளாமல் பொறாமை கொள்வான் (முனிசாமி வீ)

பிறர் உயர்வு கண்டு மகிழாமல் பொறாமைப் படுபவன் அறத்தால் வரும் புண்ணியத்தை வேண்டாம் என மறுப்பவனாவான். ( சாலமன் பாப்பையா)

முனிசாமி மற்றும் சாலமன் பாப்பை ஆகியோரின் வியாக்கியானப் பிரகாரம் மனித உள்ளத்தில் எடுத்தாளப்பட வேண்டிய உயர்ந்த குணமாக ஏற்றுக்கொள்ளாமல், அடுத்தவர் பெறும் வெற்றிகளின் போதும் உயர்வுகளின் போதும் துணைநிற்றல், ஏற்றுக்கொள்ளல் என்பன எடுத்தாளப்பட்டுள்ளது. அதற்கு மாற்றமாக பொறாமை கொள்வது என்பது அறத்தின் பலனாக கிடைக்கும் நன்மைகளை வேண்டாம் என்று பறுப்பதற்கு சமம் என்ற நிலையை எடுத்துக்காட்டுகின்றது.

**கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக கெடும் ( 166)**

பிறருக்கு கொடுப்பதைப் பார்த்து பொறாமைப் படுகிறவனுடைய சுற்றம் உடுப்பது உண்பதும் இல்லாமல் கெட்டுவிடும். (முனிசாமி வீ)

உதவியாக ஒருவருக்குக் கொடுக்கப்படுவதைப் பார்த்து பொறாமை கொண்டால் அந்த தீய குணம் அவனை மட்டும் அன்றி அவனைச் சாந்திருப்பவரையும் உணவுக்கும் உடைக்கும் கூட வழியில்லாமல் ஆக்கிவிடும். ( கருணாநிதி மு)

**அல் ஹதீஸ்**

**பொறாமை கொள்வது பற்றி உங்களை எச்சரிக்கின்றேன். நெருப்பை விறகு சாப்பிடுவது போல் நன்மைகளை பொறாமை சாப்பிட்டு விடும். அபூதாவுத் : 4903**

மேற்படி திருக்குறளும் ஹதீஸும் பொறாமை என்பது கொடியது எனும் கருத்தை உரத்துப் பேசுகின்றன.

“ பொறாமை உள்ள நெஞ்சினை கொள்ளிக் கட்டையால் அடிக்க சுடவேண்டும்” என்பது பழமொழி. துரியோதனன் பொறாமைத் தீயினாலேயே அழிந்தான் என்பதும் வரலாறு எமக்கு கற்றுத் தரும் பாடம்.

ஒரு மனிதனுக்கு மறுமை இன்பம் தருவது அறம். இம்மை இன்பம் தருவது செல்வம். ஆனால் பொறாமை பிடித்தவன் அறம் செய்வதையும் பொருள் ஈட்டலையும் போற்றாது பிறர் வளர்ச்சியைக் கண்டு மகிழ்வதற்குப் பதிலாக மனம் புழுங்குவான். ஆதனால் அறமும் இல்லை செல்வமும் இல்லை எனும் நிலை உருவாகி விடும்.

கொடை கொடுத்தல் என்பது சமூகத்தில் அவசியம் பின்பற்றப்பட வேண்டிய மிகவும் உயர்ந்த, போற்றத்தக்க விடயமாகும். இதன் ஊடாக சமூகத்தில் எழும் பிரச்சினைகளான வறுமை, தற்கொலை, வேலையில்லா பிரச்சினை போன்றவற்றுக்கு ஓர் சிறந்த அடிப்படை நிவாரணியாக அமைகின்றது. இவ்வாறான பிரச்சினைகள் தீர்க்கப்பட இது கடைப்பிடிக்கப்பட வேண்டிய விடயமாகும். இங்கு ஆய்வுக்காக ஏடுத்துக்கொள்ளப்பட்ட அல் ஹதீ மற்றும் திருக்குறளின் போதனைகள் பொறுமை கொள்ளுதல் மற்றும் கொடை கொடுத்தல் என்பனவற்றை சிறந்த முறையில் போதித்துள்ளது. இனரீதியிலான வேறுபாடுகளை கழைந்து சமூகங்களுக்கிடையில் ஒற்றுமை, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல் போன்ற பண்புகளை வளர்ப்பதற்கு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பொறுமை மற்றும் கொடை கொடுத்தல் எனும் பண்பாடுகள் சிறந்த முறையில் கடைப்பிடிக்கப்படல் வேண்டும். குறித்த ஒரு சமூகம் தமது சமூகத்திற்கு மாத்திரம் கொடை கொடுத்தல், உதவி புரிதல் என்பது தவிர்க்கப்பட வேண்டிய விடயமாகும். ஒரு சமூகத்தின் மீது மாத்திரம் அதீத கவனம் செலுத்துவதானது இனரீதியிலான முரண்பாடுகளை தோற்றுவிக்கின்றன. எனவே அடுத்தவர் மீது பொறை கொள்ளலும், அடுத்தவருக்கு ஏற்படும் நலவுகளின் மீது பொறாமை கொள்ளலும் இதன் மூலம்

தடைசெய்ப்பட்டுள்ளன. இதனை கடைப்பிடித்தொழுகுவது சமூக நல்லிணக்கத்ததை ஏற்படுத்த உதவியாக அமையும்.

2- **தீவினையச்சம்**

சமூக நல்லிணக்கத்தை, ஒற்றுமையை ஏற்படுத்துவதில் **தீவினையச்சம்** எனும் பிறருக்கு தீங்கு செய்ய நினைக்கக் கூடாது எனும் கொள்கையானது இவ்வாறு போதிக்கப்படுகின்றன.

**திருக்குறள் (02)**

**அகுங்கேடன் என்பது அறிக மருங்கோடித்**

**தீவினை செய்யான் எனின் (210)**

வழிதவறிச் சென்று பிறருக்கு தீங்கு வினைவிக்காதவருக்கு எந்தக் கேடும் ஏற்படாது என்பதை அறிந்து கொள்க. ( கருணாநிதி மு)

பிறருக்கு தீங்கு விழைவித்தல் என்பது ஒரு மனிதன் தனது சமய போதனைகளை விட்டும் விலகிச் சென்று தனது மனரீதியிலான இச்சைகளுக்கு அடிமைப்பட்டு கேடு வினைவிக்கின்றான். தமது வாழ்வில் கேடுகள், தீங்குகள், பிரச்சினைகள் ஏற்படாமல் நாம் பாதுகாக்கப்பட நற்கருமங்கள் புரிய வேண்டும் என்பதும், அவ்வாறு எத்தீங்கிலும் ஈடுபடாமல் வாழ்வதன் மூலம் எமது வாழ்வினை மகிழ்ச்சி மிக்கதாக அமைத்துக்கொள்ள முடியும் என்பதை இக்குறள் எமக்கு போதிக்கின்றது.

**அறிவினுள் எல்லாத் தலையென்ப தீய**

**செறுவார்க்கும் செய்யா விடல். (203)**

தீமை செய்தவருக்கு அதேயே திரும்பச் செய்யாமல் இருப்பதை எல்லா அறிவிலும் முதன்மையான அறிவு என போற்றுவர். ( கருணாநிதி மு)

இன்றை சமூகம் உயர்ந்த மனிதர்களை அடயாளம் காண்பதற்கும் அறிவில் உயர்ந்தவர் என்பதை மதிப்பீடு செய்வதற்கும் பல்வேறு வகையிலான அளவுகோல்களை பின்பற்றுகின்றனர். ஆனால் இங்கு உயர்ந்த அறிவின் அளவுகோலாக தமக்கு தீங்கு செய்தவர்களுக்கு திரும்ப அத்தீமையை செய்யாமல் இருப்பது என்று கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் மனித குலத்தின் உயர்ந்த பண்பாடு எடுத்தாளப்பட்டுள்ளது. இதனை கடைப்பிடிக்கும் போது எமது ஒற்றுமை பலப்படவும், பழிவாங்கும் தன்மை இழத்தலும், மன்னிக்கும் குணம் கட்டமைக்கப்படவும் உதவியாக அமைகின்றது.

**ஹதீஸ்**

ஒருவரின் நாவாலும் அவரது கைகளாலும் பிற முஸ்லிம்கள் பாதுகாப்பு பெற்றால் அவரே முஸ்லிமாவார். ( புஹாரி 10)

இறைத்தூதர் அவர்களே இஸ்லாத்தில் சிறந்த விடயம் எதுவென நபித்தோழர் கேட்டார். ஆதற்கு நபியவர்கள் எவரது நாவிலிருந்தும் கரத்திலிருந்தும் பிற முஸ்லிம்கள் பாதுகாப்பு பெற்றுகின்றார்களோ அவரின் செயலே சிறந்தது ஆகும். ( புஹாரி 11)

சமூகத்தில் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் காரணிகளை உருவாக்க உதவியாக அமையும் உடல் உறுப்புக்கள் மனிதனின் நாவு மற்றும் கைகள் ஆகும். இவற்றை பேணி பாதுகாப்பதன்

மூலம் குற்றச்செயல்களையும் அநீதிகளையும் தவிர்க்க முடியும் என்பதும் சமூகங்களுடன் ஒற்றுமையாக வாழ முடியும் என்பதும் இப்போதனைகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. திருக்குறள் மற்றும் அல்ஹதீஸின் இந்த வழிகாட்டல்கள் பிறருக்கு தீங்கு விளைவிக்காமையையும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றன. எனவே இவற்றைக் கடைப்பிடிக்கும் போது நிச்சயம் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் தோற்றம் பெறுவதுடன் சமூகத்தில் தொக்கிநிக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் என்பதும் உண்மையாகும்.

**3- ஈகை**

சமூக நல்லிணக்கத்தை, ஒற்றுமையை ஏற்படுத்துவதில் **ஈகை** எனும் கொடையளித்தல் எனும் கொள்கையானது இவ்வாறு போதிக்கப்படுகின்றன.

**திருக்குறள்**

**வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்**

**குறி எதிர்ப்பை நீர துடைத்து (221)**

இல்லாதவர்க்கு வழங்குவதே ஈகைப் பண்பாகும். மற்றவர்களுக்கு வழங்குவது என்பது ஓர் ஆதாயத்தை எதிர்பார்த்து வழங்கப்படுவதாகும். ( கருணாநிதி மு)

எமது கொடுக்கல் வாங்கள் செயற்பாடுகள் இரண்டு பிரதான நோக்கங்களுடன் கையாளப்படுகின்றன. அவற்றில் ஒன்று எமது கொடுக்கலுக்கான பிரதிபலன், இலாபம் போன்று மீள்சுழற்சி செயற்பாட்டுடன் தங்கியவை. மற்றவை அதற்கான பிரதிபலனை எதிர்பாராமல் அடுத்தவர் நன்றாக வாழவேண்டும் என்ற எண்ணத்துடன் மேற்கொள்ளப்படுபவையாகும். இவற்றில் இரண்டாவதாக கூறப்பட்டுள்ள முறைதான் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை ஏற்படுத்த உதவும் காரணியாகும். ஈகை எனும் பண்புக்கு உரித்தாகுதல் இல்லாதவர்களை பராமரிப்பதன் மூலம் அடைந்துகொள்ளப்படுகின்றது.

**அற்றார் அழிபசி தீர்த்தல் அ∴தொருவன்**

**பெற்றான் பொருள்வைப் புழி. (226)**

பட்டினி எனச் சொல்லி வந்தவரின் பசியைத் தீர்ப்பது வீண் போகாது. அதுவே தான் தேடிய பொருளைப் பிற்காலத்தில் உதவுவதற்கு ஏற்ப சேமித்து வைக்கக்கூடிய கருவூலமாகும். ( கருணாநிதி மு)

எமது சேமிப்புக்கள் அனைத்தும் எமது பிற்காலத்தில் எமக்கு உதவியாக அமையவேண்டும் எனும் எண்ணத்தில் மேற்கொள்ளப்படுகின்றவைதான். அவற்றில் பண ரீதியிலான சேமிப்பு சொத்து ரீதிலான சேமிப்பு பட்டம் பதிவி ரீதியிலான சேமிப்புக்களின் மீதுதான் எமது அதிக கவனம் திருப்பப்படுகின்றது. ஆனால் உண்மையில் உயர்த சேமிப்பு என்பது பட்டினியுடன் வாழும் மக்களின் பசியைத் தீர்த்து வைப்பதுதான். அதற்காக எம்மிடம் கை ஏந்தும் மக்களின் கைகளை வெறும் கைகளாக மாற்றிவிடல் நன்மையற்ற விடயம். இதற்கா இனம், மதம், ஜாதி, அந்தஸ்து என்பன பார்க்கப்படல் அவசியமற்ற விடயமாகும். இவ்வாறு பார்க்காமல் அனைவருக்கும் உதவும் உளரீதியான பக்குவம் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

**ஹதீஸ்**

தா்மம் செய்வது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் கடமையாகும் என்று நபியவர்கள் கூறியதும் நபித்தோழர்கள் இறைத்தூதர் அவர்களே தர்மம் செய்வதற்கான பொருள் ஏதும் கிடைக்காவிட்டால்? எனக் கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் ஏதேனும் கைத் தொழில் செய்து தாமும் அதன் மூலம் பயனடைந்து தர்மமும் செய்யவேண்டும் என்றார்கள். தோழர்கள் அதற்கும் முடியாத போது என வினவியதும், தேவையுடைய, உதவி தேடி நிற்கும் நபருக்கு உதவ வேண்டும் என்று பதிலளித்தார்கள். தோழர்கள் அதற்கும் முடியாத போது என

வினவியதும் நற்காரியத்தைச் செய்து தீமையிலிருந்து தடுத்துக் கொள்ள வேண்டும். இதுவே அவர் செய்யும் தர்மம் ஆகும். ( புஹாரி 1445)

தர்மம் செய்தல் என்பது முஸ்லிமின் மீது கடமையான விடயமாகும். ஆனால் யாருக்கு செய்ய வேண்டும் எனும் வரையறைகள் இங்கு விதிக்கப்படவில்லை. எனவே தர்மம் என்பது பொதுவாக எவருக்கும் செய்யப்பட முடியுமான ஒரு நற்கருமம் என்பது இங்கு முதலாவதாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இரண்டாவது விடயமாக தர்மம் செய்வதற்கு ஏதேனும் கைத்தொழில் செய்து தமக்கும் அவற்றில் பயன்பெற்றுக்கொண்டு மீதியில் தர்மம் செய்யப்பட வேண்டும் என்னும் போதனை இங்கு அவதானிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். தர்மம் செய்வதற்காக தொழில் புரிய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் எம்மிடம் உள்ள வங்கி சேமிப்பு எவ்வளவோ உயர்ந்து செல்கின்றது. ஆனால் எமது சமூகத்தில் தேவையுடையோர் இன்னும் பல்வேறு பிரச்சினைகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். எனவே இந்த கொடை கொடுத்தல் பண்பினை பின்பற்றுகின்ற போது இனங்களுக்கு இடையில் சிறந்த வலுகாக்கம் இடம் பெறும். மேலும் முரண்பாடுகளை தவிர்க்கவும், ஒரு சமூகம் அடுத்த சமூகத்தின் பொருளாதாரத்தின் மீது வெறுப்புக்கொண்டு அழிவுகளை ஏற்படுத்தாமல் இருக்கவும் உதவியாக அமையும்.

**4- இல்வாழ்க்கை**

**இல்வாழ்க்கை** எனும் அயலவர்களுடன் நல்ல முறையில் நடத்தல் கொள்கையானது இவ்வாறு போதிக்கப்படுகின்றன.

**திருக்குறள்**

**தென்புலந்தார் தெய்வேம் விருந்தொக்கல்**

**தானென்றங்கு ஐம்புல்தாரு ஓம்பல் தலை (43)**

வாழ்ந்து மறைந்தோரை நினைவு கூறுதல் வாழ்வாங்கு வாழ்வோரைப் போற்றுதல்,
விருந்தோம்பல், சுற்றம் பேணுதல் ஆகிய கடமைகளை நிறைவேற்ற தன்னை நிலைப்படுத்திக்
கொள்ளல் எனப்படும் 5 வகை அறநெறிகளும் இவ்வுலகுக்கு உரியதாகும்.

இக்குறளில் ஐந்து விதமான அறநெறிகள் போதிக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் உயரிய பண்புகளை வழர்க்கும் வடிவங்களாகும். எமது சமூகத்தில் வாழ்ந்து மறைந்தோர் பற்றிய நினைவு கூறும் செயற்பாடு சில காலங்களுடன் மறைந்து போகும் அல்லது மறந்து போகும் நிலையை பார்க்கின்றோம். மறைந்தவர் சமூகத்தில் ஒரு சாதனையாளராக அல்லது மாற்றங்களை ஏற்படுத்தியவராக இருக்கும் போது நிச்சயம் அதன் மூலம் சமூகத்தில் நல்வாழ்வினை ஏற்படுத்த முடியும். மேலும் சமூகத்தில் நல்லமுறையில் வாழ்வோரை பாராட்டி புகழுதல் கடைப்பிடிக்கப்பட வேண்டிய விடயமாகும். இங்கு எந்த இனத்தவராக இருந்த போதிலும் அவரை பாராட்டி வாழ்த்த வேண்டும். இதன் மூலம் குறித்த இனத்தவர் பாராட்டும் இனத்தின் மீது மதிப்பு, மரியாதை என்பனவற்றை அதிகப்படுத்தும். விருந்தோம்பல் எனும் செயற்பாட்டின் மூலம் சமூகங்களுக்கு மத்தியில் நல்லுறவை ஏற்படுத்த முடியும். ஆனால் இன்று எமக்கு மத்தியில் குறித்த இனத்தவர்கள் தமது இனத்தவர்களுடன் மாத்திரம் இச்செயலை மட்டுப்படுத்திக்கொள்கின்றனர்.

**ஹதீஸ்**

அண்டை வீட்டார் எனக்கு வாரிசாக ஆகிவிடுவார் என நான் எண்ணும் அளவிற்கு அண்டை
வீட்டார் பற்றி ஜிப்ரீல் ஆகிய வானவர் எனக்கு உபதேசம் செய்து கொண்டே இருந்தார்
என்று இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி )

யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொண்டுள்ளாரோ அவர் அண்டை வீட்டாரை கண்ணியப்படுத்தட்டும். (புஹாரி)

இனங்களுக்கு மத்தியில் நல்லுறவையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த போதிக்கப்பட்ட போதனைகளில் உயர்ந்த இடத்தில் வைத்துப்பார்க்கப்படும் விடயமே இதுவாகும். இப்போதனையில் அண்டை வீட்டார் என்று மாத்திரமே கூறப்பட்டுள்ளது. அவர் எந்த இனம் எந்த மதம் எந்த நிறம் என்று எதுவுமே கூறப்படவில்லை. எனவே எமது அண்டை வீட்டார்களை நேசித்து அவர்களின் உரிமைகளை மதித்து அவர்களை கண்ணியப்படுத்துவது இஸ்லாமிய போதனைகளில் மிகவும் உயர்ந்த போதனையாகும். இவற்றை பின்பற்றுவதன் மூலம் சமூகங்களுக்கு மத்தியில் நல்லிணக்கம் தோற்றுவிக்கப்படும் என்பதில் ஐயம் கிடையாது.

**5- இனியவை கூறல்**

**இனியவை கூறல்** எனும் நல்ல வார்த்தையைக் கூறல் எனும் கொள்கையானது இவ்வாறு போதிக்கப்படுகின்றன.

**திருக்குறள்**

**முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி**

**அகத்தானம் இன்சொலினதே அறம் (93)**

முகம் மலர நோக்கி, அகம் மலர இனிய சொற்களைக் கூறுவதே அறவழியில் அமைந்த பண்பாகும். ( கருணாநிதி மு)

பிறரைப் பார்க்கும் போது முகத்தால் விரும்பி இனிமையாகப் பார்த்து உள்ளத்துள் இருந்து வரும் இனிய சொற்களைச் சொல்வதே அறம் ஆகும். ( சாலமன் பாப்பையா)

மனித தொடர்பாடல் என்பது தவிர்க்க முடியாத ஒரு அடிப்படை விடயமாகும். இவ்வாறான தொடர்பாடல் செயற்பாட்டில் கடைப்பிடிக்க வேண்டிய பிரதான இரண்டு அம்சங்கள் இங்கு எடுத்தாளப்பட்டுள்ளன. மனிதன் பிறரைப்பார்க்கும் போது எவ்வாறான தோற்றப்பாடு வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று இங்கு போதிக்கப்பட்டுள்ளது. அவன் முகம் மலர்ந்து விரும்பி புன்முறுவல் பூர்த்து வரவேற்கும் நிலையினை கடைப்பிடிக்க வேண்டும். அவனுடன் உரையாடும் போது கடினத்தன்மையை களைந்து இனிய வார்த்தைகளை பயன்படுத்த வேண்டும் என்ற போதனை இந்த குறளின் மூலம் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

**ஹதீஸ்**

ஒருவர் இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களிடம் இஸ்லாத்தில் சிறந்தது எது எனக் கேட்டதற்கு: பசித்தோருக்கு நீர் உணவளிப்பதும் நீர் அறிந்தவருக்கும் அறியாதவருக்கும் ஸலாம் (முகமன்) கூறுவதுமாகும் எனப் பதில் கூறினார்கள். (புஹாரி 12)

தொடர்பாடல் செயற்பாட்டில் அறிந்தவர், அறியாதவர் என இரு நிலைகள் உண்டு. எமக்கு அறிமுகமான முகங்களுடன் உரையாடும் போது ஒரு நிலையும், எமக்கு அறிமுகம் இல்லாதவர்களுடன் இன்னொரு நிலையையும் கடைப்பிடிக்ககூடாது. மாறாக இரண்டு தரப்பினர்களையும் இன்முகத்துடன் வரவேற்று வாழ்த்துக்கூறி எமது தொடர்பாடல் செயற்பாடுகளை அமைத்துக்கொள்ள வேண்டும் எனும் போதனையின் ஊடாக அனைத்து தரப்பினருடனும் அழகிய முறையில் எமது அன்றாடச் செயற்பாடுகள் அமைய வேண்டும் என்பது இங்கு போதிக்கப்பட்டுள்ளது.

**ஆய்வின் முடிவு**

உலகில் பிறந்த மனிதர்கள் ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளாக அல் ஹதீஸூம் திருக்குறளும் எடுத்துக்கூறுகின்றன. பல அற நிதிக்கருத்துக்களைக் கொண்டுள்ள இவை பிறப்பில் ஏற்றத்தாழ்வு காணாத சமநிலைப்

பார்வையினை உடையன. இதனது கருத்துக்கள் அக்காலத்திற்கு மட்டுமன்றி எக்காலத்திற்கும் பொருந்துவதாகக் காணப்படுகின்றமை இவற்றினது சிறப்புக்கு சிறந்த எடுத்துக்காட்டுக்களாக உள்ளன. அவ்வகையில் அன்புடமை, இல்வாழ்க்கை, இன்சொல் கூறுதுல், செய்ந்நன்றியறிதல் போன்ற இன்னும் பல அம்சங்களில் இவ்விரண்டும் ஒத்த சிந்தனைகளை மக்களது மேம்பாட்டின் பொருட்டு முன்வைப்பதனை அவதானிக்கலாம். இவர்கள் தருகின்ற கருத்துக்கள் சீரிய முறையில் பின்பற்றப்படுமாயின் உலகில் நல்ல பண்பாட்டினையுடைய, ஒற்றுமையுடைய சமுதாயத்தினை உருவாக்க முடியும் என்பது இவ் ஆய்வு வெளிப்படுத்தும் உண்மையாகும்.

**உசாத்துணைகள்**

கந்தாசாமி, செ. (1959) *திருக்குறள் உரைக்கொத்து*, திருக்குறள் பதிப்பு நிதி வெளியீடு, திருச்சிராப்பள்ளி.
கலாதேவி.ச. (2011) *வள்ளுவர் காட்டும் பண்பாட்டுப் பதிவுகள்.* தமிழ் ஐயா வெளியீட்டகம், திருவையாறு

பரந்தாமன்,பெ. (2014) *திருக்குறள்*, தமிழ் ஐயா வெளியீட்டகம், திருவையாறு.11

முருகன், இரா.சு. (2011) *திருவள்ளுவர் காத்த நீதியும் அறமும்*, தமிழ் ஐயா வெளியீட்டகம், திருவையாறு.

முருகன், ப. (1991) *குறள்வழிச் சிந்தனைகள்*, செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடட், சென்னை.